பக்கங்கள் 17+4

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 13 ஞாயிற்றுக்கிழமை 29.09.2024 | அதிர்வு 59

## 13,306 மாணவர்களுக்கு 9 பாடங்களிலும் ஏ சித்தி

2023 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் 13 ஆயிரத்து 309 மாணவர்கள் 9 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

## தமிழரசின் ஆதிக்கத்தின் கீழ் சேர முடியாது!

### சுமந்திரனின் அழைப்புக்கு எதிராகப் புளொட் தலைவர் சித்தர் கருத்து

(கே.வசந்தன்)

“நாடாளுமன்றத் தேர்தலில் ஒன்றாகப் போட்டிடுவது தொடர்பான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அறிவிப்பின் மூலம் ஆதிக்கம் தமிழரசுக் கட்சியினுடையதே. வந்து சேருங்கள் உங்களுக்கு நாங்களாகப் பார்த்து தருவோம் என்றவாறான நிலைப்பாட்டை கூறியிருப்பதாகவே தெரிகின்றது. அப்படியான நிலைப்பாட்டில் நாங்கள் போக முடியாது.”

– இவ்வாறு புளொட் தலைவரும் யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

03



# சுமந்திரன் அணியினருடன் ஒருபோதும் சேரவே முடியாது!

### தமிழரசின் அழைப்புக்கு தமிழ்த் தேசியக் கட்சி இப்படி பதில்

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

“ஒற்றுமை என்பது கொள்கையுடன், குறிக்கோளுடன் இருக்க வேண்டுமானால் தமிழரசுக் கட்சியில் ஆதிக்கம் செலுத்துக்கின்ற சுமந்திரன் தலைமையிலான அணியுடன் ஒருபோதும் அந்த ஒற்றுமையை ஏற்படுத்த முடியாது, ஏற்படுத்தக் கூடாது என்பதே தமிழ்த் தேசியக் கட்சியின் முடிவு.”

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறீகாந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

04



### நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில்

## தமிழ்த் தேசியக் கட்சிகளை நாளை சந்திக்கின்றார் இந்தியத் தூதுவர்!



(பிரபாகரன் டிலக்சன்)

தமிழ்க் கட்சிகளை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நாளை திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, தமிழ்க் கட்சிகளை அழைத்து கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக அலுவலகத்தில் நாளை பிற்பகல் கலந்துரையாடவுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

04




# வடக்கு - கிழக்கில் ஊழல் அற்ற அரசியலை முன்னெடுப்பதற்கு நாங்கள் போராடுவோம்!

**புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் இன்பராசா**

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

தற்போதைய ஜனாதிபதி ஊழல் அற்ற நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமை போல் வடக்கு - கிழக்கில் ஊழல் அற்ற அரசியலை முன்னெடுக்க நாங்கள் போராடுவோம்.

இவ்வாறு புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் கே.இன்பராசா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் வடக்கு - கிழக்கில் உள்ள முன்னால் போராளிகள், சிவில் அமைப்புகள், ஆதரவாளர்கள் மற்றும் புலம் பெயர் மக்களின் அனுசரணையுடன் புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப்புளிகள் கட்சி சுயேட்சையாக வடக்கு - கிழக்கில் போட்டியிட உள்ளது என்று அக்கட்சியின் தலைவர் கே.இன்பராசா மேலும் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று சனிக்கிழமை (28) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது அதிகூடிய சிங்கள மக்களின் வாக்குகளால் வெற்றி பெற்று ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திஸாநாயக்கவுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த நிலையில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு - கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியினர் சுயேட்சையாக போட்டியிட உள்ளோம்.

தமிழ் மக்கள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். குறித்த தேர்தல் தொடர்பில் நாங்கள் உங்களை தேடி வருவோம். எங்களுக்கு பூரண ஆதரவை வழங்க வேண்டும். வடக்கு - கிழக்கு மக்களுக்காக நாங்கள் எங்கள் உயிரையே அர்ப்பணித்தோம். அங்கவீனமாக்கப்பட்டுள்ளோம். அனாதரவாக்கப்பட்டுள்ளோம். இந்த நிலையில் முன்னாள் விடுதலைப் புலிகள் ஆகிய நாங்கள் இந்தத் தேர்தலில் களமிறங்க உள்ளோம்.

தற்போதைய ஜனாதிபதியின் ஊழல் அற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை போல் வடக்கு கிழக்கில் ஊழல் அற்ற அரசியலை முன்னெடுக்க நாங்கள் போராடுவோம்.

மன்னார் மாவட்ட முன்னாள் விடுதலைப் புலிகளும் எங்களுடன் இணைந்துள்ளனர். எனவே தமிழ் மக்களும் எங்களுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.-என்றார்.





# மட்டு.பாலமீன்மடு வைத்தியசாலையில் நோயாளர் பாதுகாப்பு, சுகாதார மையம்!

**(பழுவூரான்)**

மட்டக்களப்பு பாலமீன்மடு பிரதேச வைத்தியசாலையில் நோயாளர் பாதுகாப்பு மற்றும் சுகாதார தகவல் மையம் ஆகியவற்றை நேற்று சனிக்கிழமை (28) மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எஸ். முரளீஸ்வரன் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பாலமீன்மடு பிரதேச வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்தியர் சிங்கராஜா இனியன், வைத்திய அதிகாரிகள், தாதியர்கள், பணியாளர்கள்,பிரதேச வாழ் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நோயாளர் பாதுகாப்பு மற்றும் சுகாதார தகவல் மையம் முதல் தடவையாக மட்டக்களப்பு மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த மையத்தில் நோயாளர்களுக்குத் தேவையான அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள், நோய்களைப் பற்றிய விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.



# பெண்களுக்கு ஆசன ஒதுக்கீடு சரிசமமாகப் பகிரப்பட வேண்டும்

## அரசியல் கட்சிகளின் பெண்கள் குழு கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

நாடாளுமன்றத் தேர்தலில் பெண்களுக்கு ஆசன ஒதுக்கீடு சரிசமமாகப் பகிரப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியம் சார்ந்து வடக்கு, கிழக்கில் இயங்கும் அரசியல் கட்சிகளின் பெண்கள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலுக்குப் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே பெண்கள் குழு இவ்வாறு கூட்டாக அறிவித்துள்ளது.





**தமிழரசின்...**

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) பொதுச் சபைக் கூட்டம் வவுனியா விருந்தினர் விடுதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பல்வேறு விடயங்கள் தொடர்பாக இன்று கலந்துரையாடினோம். தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும் என்பது நாங்கள் தொடர்ச்சியாக கூறி வருகின்ற விடயம். ஒரு கட்சி மற்றக் கட்சியின் மீது ஆதிக்கம் செலுத்துவதை விடுத்து உண்மையான கூட்டாகச் செயற்பட வேண்டும்.

அன்று தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் நாங்கள் கூட்டமைப்பாகச் செயற்பட்டபோது பல பிரச்சினைகள் உருவாகியிருந்தன. கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தாங்கள் தனியாகப் போட்டியிடப் போவதாக தமிழரசுக் கட்சி முடிவெடுத்திருந்தது. அதன் பின்னர் சம்பந்தனுடன் நாங்கள் கலந்துரையாடச் சென்ற போதும் அவர் மிகத் தெளிவாக அதே கருத்தைச் சொல்லியிருந்தார். நீங்கள் தமிழரசுக் கட்சியை இல்லாமல் செய்யப் பார்க்கிறீர்களா என்று அவரும் சொன்னார்.

இருப்பினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு தமிழரசுக் கட்சி சென்றாலும் நாங்கள் இயங்காமல் இருக்கமாட்டோம்தானே. அப்படி இருக்கவும் கூடாது. எனவே, நாங்கள் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினூடாக உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வேட்புமனுவைத் தாக்கல் செய்தோம். இப்போது பல கட்சிகள் இணைந்திருக்கின்றன.

அவர்கள்தான் விட்டுச் சென்றவர்கள். எனவே, அவர்கள்தான் வரவேண்டும். அவர்கள் வந்தால் எமது கட்சிகளோடும், சிவில் அமைப்புகளின் கூட்டோடும் கலந்துரையாடிய பின்னரே முடிவை எடுக்கலாம். தனிப்பட்ட முறையில் சொன்னால் அவர்களது வரவு இந்தக் கட்டமைப்பைப் பெரிதாக்கும். அது எனக்கும் விருப்பம்.

அனைவரும் இணைவது தமிழ் மக்களுக்குப் பலமாகவும் இருக்கும். ஆனால், அவர்கள் சொல்லியிருப்பது தமிழரசுக் கட்சி சின்னத்தில் என்று. இது பழையபடி தமிழரசுக் கட்சிதான் முடிவெடுக்கப்போகின்றது என்ற அடிப்படையிலும், ஆதிக்கம் தமிழரசுக் கட்சியினுடையதே – நீங்கள் சேருங்கள் உங்களுக்கு நாங்கள் பார்த்துத் தருவோம் என்றவாறான ஒரு நிலைப்பாட்டையே கூறியிருக்கின்றார்கள். அப்படியான நிலைப்பாட்டில் நாங்கள் போக முடியாது. அனைவரும் சம பங்காளிகளாக ஒரு கூட்டமைப்பாக இணைந்தால் அதில் சேர முடியும். அதற்கான நேர காலம் இருக்கின்றதோ தெரியாது. அவர்கள் மூன்று நாட்களையே அவகாசமாகக் கொடுத்துள்ளனர்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு சங்கு சின்னத்தை எடுப்பதற்கான ஒரு அபிப்பிராயம் இருந்தது. அதற்கான முயற்சியைச் செய்வதாகத் தீர்மானித்திருக்கின்றோம். அதனைச் செய்வோம்.

அத்துடன் இளைஞர்களையும் நிச்சயமாக உள்ளே கொண்டுவரவேண்டும். அதேபோல் அனுபவம் உள்ளவர்களும் இருக்க வேண்டும். இருந்தாலும் அப்படி ஒரு கருத்தாக்கம் மக்கள் மத்தியில் இல்லை. தேர்தலில் தாங்கள் போட்டியிடுவதற்காகச் சிலர் உருவாக்கும் ஒரு கருத்தே இது. இது கட்சிகளைப் பலவீனப்படுத்துகின்ற ஒரு விடயம். நாங்கள் கடந்த முறையும் இளைஞர்களை நிறுத்தியிருந்தோம். இப்போதும் நிச்சயமாக இளைஞர்கள் கேட்பார்கள்.

தமிழ்க் கட்சிகள் பிரிந்து நிற்பது பிரதிநிதித்துவத்தில் நிச்சயமாகத் தாக்கத்தை ஏற்படுத்தும். அதற்காகவே ஒரு கூட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று பார்க்கின்றோம். சிலர் சேர முடியாத நிலை இருக்கிறது. குறிப்பாக டக்ளஸ் தேவானந்தாவும், நாங்களும் சேர்வது கஷ்டமான விடயம். அரசுடன் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இருந்தால் அரசு சொல்வதையே சொல்ல வேண்டிய சங்கடம் இருக்கிறது. எமது சார்பாகக் கதைக்க முடியாது. மௌனியாகவே இருக்க வேண்டும். அபிவிருத்திப் பணிகள் செய்யலாம். ஆனால், 1956 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நியாயமான ஒரு தீர்வை நோக்கியே தமிழ் மக்கள் வாக்களித்து வருகின்றனர்.” – என்றார்.




# புதியவரிடம் பொதுச்செயலாளர் பதவியை கையளிக்கத் தயாராகும் ரில்வின் சில்வா!

"நான் சாகும் வரை ஜே.வி.பிகாரன் தான். இதில் மாற்றம் எதுவும் வராது. ஆனால், மரணிக்கும் வரை பதவியில் நீடிக்க வேண்டும் என்றில்லை. பொதுச் செயலாளர் பதவியை மற்றுமொரு புதியவர் ஒருவருக்கு வழங்க எதிர் பார்த்துள்ளேன்."

– இவ்வாறு ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா பி.பி.சி. சிங்கள சேவைக்கு வழங்கிய நேர் காணலில் தெரிவித்தார்.

பொதுத்தேர்தல் முடிந்ததும், அடுத்த வருடம் கட்சி மாநாட்டை நடத்தி இதற் குரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை உள்ளது என்றும் அவர் கூறினார்.

1978 ஆம் ஆண்டு ஜே.வி.பியில் இணைந்த ரில்வின் சில்வா, 1995 ஆம் ஆண்டு ஜே.வி.பியின் பொதுச்செயலா ளர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். அன்று முதல் இன்று வரை 29 வருடங்களாக அந்தப் பதவியில் அவர் நீடிக்கின்றார்.

கட்சி செயற்பாடுகள் காரணமாக சிறைவாசமும் அவர் அனுபவித் துள்ளார்.

ஜே.வி.பிக்கு எதிராக விதிக்கப் பட்டிருந்த தடை நீக்கப்பட்டு, அக்கட்சியி னர் ஜனநாயக வழிக்குத் திரும்பிய பின் னர், கட்சியை மீளக் கட்டியெழுப்பு வதில் ரில்வின் சில்வாவின் பங்களிப்பு அளப்பரியது.

ஜே.வி.பி. அரசியல் ரீதியாகப் பின் னடைவுகளைச் சந்தித்த வேளைகளில் கட்சி தோழர்களை உற்சாகப்படுத்தி கட்சியை ஒரு கட்டுப்கோப்பாக வழிநடத் தியவர்களில் ரில்வின் சில்வா பிரதான மானவர்.

ஜே.வி.பிக்குள் உள்ளக மோதல்கள் வெடித்த சந்தர்ப்பங்களில் கட்சி கட்ட மைப்பு சிதைவடையக்கூடாது என்ப தற்காகப் பல தியாகங்களைச் செய்த வர்.

ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளது . ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகியுள்ளார்.

இந்நிலையில் அநுரவைப் போலவே பலரும் ரில்வின் சில்வாவைப் பற்றியும் தேட ஆரம்பித்துள்ளனர்.

பி.பி.சிக்கு வழங்கிய நேர்காணலின் அவர் தனது கடந்த காலம் பற்றியும் விபரித்துள்ளார். இதன்போது இன்னும் எத்தனை வருடங்கள் ஜே.வி.பியின் பிர தான செயலாளராக இருக்கின்றீர்கள் எனக் கேள்வி எழுப்பப்பட்டது, இதற்கு பதிலளித்த அவர்,

"நான் சாகும்வரை ஜே.வி.பிகாரன் தான். உடலில் உயிர் இருக்கும் வரை அரசியலிலும் ஈடுபடுவேன்.

ஆனால், மரணிக்கும் வரை பதவி வகிக்க வேண்டும் என்றில்லை. நீண்ட காலம் பொதுச்செயலாளர் பதவியில் இருந்துவிட்டேன். புதியவர் வரவேண்டும் எனக் கருதுகின்றேன். உடனடி மாற் றத்தை கட்சி தோழர்கள் விரும்ப வில்லை.

நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த பிறகு, மாநாட்டை நடத்தி இதனைச் செய்யலாம். சிறப்பாகச் செயற்படக் கூடிய தோழர்கள் உள்ளனர்." – என்றார் ரில்வின் சில்வா.

அதேவேளை, அரசில் எவ்வித பதவி யையும் தான் ஏற்கமாட்டார் என்றும் அவர் கூறினார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### 13,306 மாணவர்களுக்கு...

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் களில் 2.12 வீதமானோர் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ள னர்.

75.72 சதவீதமான மாணவர்கள் உயர்தரம் கற்பதற்குத் தகுதி பெற்றுள்ள னர்.

### தமிழ்த் தேசிய...

நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக் கப்பட்டுள்ள நிலையில் தமிழ்க் கட்சி களுடனான இந்தியத் தூதுவரின் சந் திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

### சுமந்திரன் அணியினருடன்...

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பல்வேறு காலகட்டங்களில் வெளியேறியவர்கள் மீண்டும் இணைய வேண்டும் எனப் புன்முறுவலோடு சுமந் திரன் அழைப்பு விடுத்திருக்கினறார். அவருக்கு நாங்களும் புன்முறுவலோடு பதிலளிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

அம்பாறை, திருகோணமலை மாவட் டங்களில் தமிழ் மக்களின் பிரதிநிதித் துவத்தைத் தக்கவைக்க வேண்டும் என்ற அடிப்படையில் தமிழரசுக் கட்சி யோடு இணைந்து கூட்டாகச் செயற்பட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தயாராகவுள்ளது.

ஆனால், யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு ஆகிய தேர்தல் மாவட்டங்க ளில் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதில் கொள்கை ரீதியாகவும், கடந்த கால அனுபவ ரீதியாகவும் பல மனஸ்தாபங்கள் உள்ளன.

இணையுமாறு அழைப்பு விடுக்கப் பட்டிருந்தது எதற்காக? தமிழ்த் தேசி யத்தை சிங்கள தேசியத்துடன் சமரசம் செய்து வைப்பதற்காவா? அல்லது இருக்கின்ற பதவிக் கதிரைகளை பறி போகவிடாமல் தக்கவைப்பதற்காகவா? அல்லது கடந்த காலம் போல் ஆட்சியா ளர்களுடன் மறைமுக சமரசம் செய்வ தற்காக? போன்ற கேள்விகளை எழுப்ப வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.

ஒற்றுமை என்பது கொள்கையுடன், குறிக்கோளுடன் இருக்க வேண்டுமானால் தமிழரசுக் கட்சியில் ஆதிக்கம் செலுத்து கின்ற சுமந்திரன் தலைமையிலான அணியுடன் ஒருபோதும் அந்த ஒற்று மையை ஏற்படுத்த முடியாது, ஏற்படுத் தக் கூடாது என்பதே தமிழ்த் தேசியக் கட்சியின் முடிவு ஆகும்.

முதலிலே தமிழரசுக் கட்சிக்குள் ஒற்றுமைப்பட முடியாதவர்கள் ஒற்றுமைக் கான அழைப்பை புன்முறுவலோடு விடுப்பது ஒட்டுமொத்த தமிழர்களையும் ஏமாற்றும் செயலாகும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியோடு இணைந்து வீட்டுச் சின்னத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பாகப் போட்டியிடுவதா? இல்லையா? என்பது குறித்து ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கூடி ஆராயவுள்ளது. அதில் தமிழ்த் தேசிய கட்சியின் முடிவை உறுதியாகத் தெரிவிப்போம்." – என்றார்.



# அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் செயற் குழுவினருடன் கலந்துரையாடல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கடந்த ஜனாதபதி தேர்தலில் கட்சியின் தீர்மானத்தினை ஏற்று கட்சியின் அம்பாறை மாவட்ட ஆதரவாளர்களை சஜீத் பிரேமதாஸவுக்கு வாக்களிக்க செய்த கட்சியின் போராளிகளுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகவும், எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்துவது தொடர்பாக ஆராய்வதற்காகவும் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் நேற்று இடம் பெற்றது.

மாளிகைக்காடு பாவா ரோயலி வரவேற்பு மண்பத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன் போது எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி தனித்துப் போட்டியிடுவதாக அறிவித்திருந்ததுடன், வேட்பாளர்கள் தெரிவு மற்றும் தேர்தல் செயற்பாடுகள் போன்றவை குறித்து அம்பாறை மாவட்ட பேராளர்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கட்சியின் தேசிய தலைவர் றிஷாத் பதியுதீன் பங்குபற்றுதலுடன் இடம் பெற்ற இந்நிகழ்வில், கட்சியின் தவிசாளர் அமீர் அலி, கட்சியின் தேசிய கொள்கைபரப்பு செயலாளரும் அம்பறை மாவட்ட செயற்குழு தலைவருமான கே.எம்.ஏ. ஜவாத் மற்றும் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், அம்பாரை மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் முக்கியஸ்த்தர்கள், போராளிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



# கல்முனை பற்றிமா கல்லூரியில் 30 மாணவர்களுக்கு 9ஏ சித்தி

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கில் பூகழ்பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியில் நேற்று வெளியான க.பொ.த. சாதாரண பரீட்சை பெறுபேறுகளின்படி 30 மாணவர்கள் 9ஏ சித்தி பெற்றுள்ளார்கள்.

கல்முனை வலயத்தில் தனி ஒரு பாடசாலை இவ்வாறு 9 ஏ கூடுதலாக பெற்றது இப் பாடசாலையில் என்பது குறிப்பிடத்தக்கது.கடந்த வருடம் 18 மாணவர்கள் இப் பாடசாலையில் 9 ஏ பெற்றனர்.

இதுதொடர்பில் கல்லூரி அதிபர் அருட்சகோ. எஸ்.இ. றெஜினோல்ட் கூறுகையில்,

“எமது பாடசாலையில் இது வரை 30 மாணவர்கள் 9ஏ சித்தி பெற்றுள்ளார்கள். ஏனைய 8ஏ, 7ஏ சித்தி களின் பகுப்பாய்வு நடைபெறுகிறது.

கல்முனை வலயத்தில் தனி ஒரு பாடசாலை 9ஏ கூடுதலாக பெற்றது எமது பாடசாலையிலாகும். அதற்காக ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றிகள் கூறுகிறேன்”– என்றார்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பதில் பொலிஸ்மா அதிபர்

கடந்த இரண்டு மாதங்களாக தலைமை இல்லாமல் இருந்த இலங்கைப் பொலிஸ் பிரிவுக்கு இப்போது பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

இலங்கையின் 158 வருட பொலிஸ் பதவி நிலை சரித்திரத்தில் சாதாரண கான்ஸ்டபிள் தரத்தில் பொலிஸ் சேவையில் சேர்ந்து ஒருவர் 36 வருடங்களின் பின்னர் இப்போது பொலிஸ்மா அதிபர் தர நிலைக்கு உயர்ந்திருக்கின்றார்.

பதவியில் இருந்த பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பதவியில் இருந்து இடைநிறுத்தி ஜூலை 24ஆம் தேதி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. அது முதல், வழிகாட்டி - தலைமைத்துவம் - இல்லாத கட்டமைப்பாக பொலிஸ் திணைக்களம் தடுமாற வேண்டிய இக்கட்டு ஏற்பட்டது.

அந்த இடத்துக்கு பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்கும்படி உயர் நீதிமன்றம் பரிந்துரைத்தும் அந்த வேலையைச் சாக்குப் போக்குக் காரணம் சொல்லி செய்யாமல் இழுத்தடித்தார் அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஆயினும் பொலிஸ் தலைமைப் பதவிக்கு ஒருவர் இல்லாமலேயே நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் தனது பங்கு பணியை சிறப்பாக ஆற்றியிருக்கின்றது இலங்கை பொலிஸ் என்று சம்பந்தப்பட்ட சகல தரப்புகளும் மெச்சும் அளவுக்கு பொலிஸார் செயற்பட்டுக் காட்டியிருக்கின்றனர்.

இலங்கையின் சரித்திரத்தில் கடந்த ஜனாதிபதி தேர்தல் தான் ஒப்பீட்டளவில் வன்முறைகள் மிகக் குறைந்த தேர்தலாகும். அதற்கப் பொதுமக்கள் மாத்திரம்தான் காரணம் அல்லர். சட்டம் - ஒழுங்கை காக்கும் முக்கிய பணியில் கடமையாற்றிய பொலிஸ் துறையும் கணிசமான அளவு காரணமாகும்.

இந்தப் பொலிஸ் துறைக்கு இப்போது பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கின்றார். பொலிஸ்மா அதிபர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு இப்போது உயர்நீதி மன்ற உத்தரவினால் அப்பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள தேசபந்து தென்னக்கோனின் பதவி நிலை தொடர்பாக உயர் நீதிமன்றம் ஓர் இறுதித் தீர்ப்பை எட்டும் வரை - அல்லது ஓய்வு பெறும் வயதை தேசபந்து தென்னக்கோன் எட்டும் வரை - இப்படிப் பதில் பொலிஸ்மா அதிபர் நியமனத்தைத் தொடர்வதை தவிர வேறு வழி இல்லை.

அதுவும் அந்தப் பதவி நிலைக்கு ஒருவரை தற்காலிகமாக ஆகக் கூடியது இரண்டு வார காலத்துக்குத் தான் நியமிக்க முடியும். எனவே ஒவ்வொரு இரண்டு வார காலத்துக்கும் ஒரு தடவை பொலிஸ்மா அதிபர் பதவி நியமனக் கடிதத்தை புதிது புதிதாக வழங்குவதன் மூலம் விடயத்தைக் கொண்டிழுப்பது மட்டுமே இப்போதுள்ள ஒரே மார்க்கமாகும்.

ஒவ்வொரு தடவையும் அப்படி இரண்டு வார காலத்துக்கு பதில் பொலிஸ்மா அதிபர் பதவி நியமனம் வழங்கும் போதும் அதற்கு அரசமைப்பு கவுன்ஸிலின் அனுமதி பெறப்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

பெரும்பாலும் முதல் தடவை அந்தப் பதில் பொலிஸ்மா அதிபர் நியமனத்துக்கு அரசமைப்பு கவுன்ஸில் அனுமதி தந்து விட்டால், பின்னர் மாதத்திற்கு இரண்டு தடவைகள் அரசமைப்பு கவுன்ஸில் கூடி அந்த நியமனத்துக்கு அங்கீகாரம் தருவதை வழமைப் படுத்திக் கொள்ளும்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டாலும் புதிய நாடாளுமன்றம் அமைக்கப்படும் வரை இதே அரசமைப்பு கவுன்ஸில் செயற்படும். ஆக இப்போது ஜனாதிபதியும் பிரதமரும் மாறி விட்டமையால் அரசமைப்பு கவுன்ஸிலில் அந்த இருவர் சார்பாகவும் பிரதிநிதித்துவப்படுத்திய முறையே நிமால் டி சில்வா மற்றும் சாகர காரியவசம் ஆகியோர் இடத்திற்குப் புதியவர்கள் நியமனம் பெறுவர்.

பொதுத் தேர்தல் முடியும் வரை இந்நிலைமையே தொடரும்.





# கல்முனை ஸாஹிரா மாணவர் 21 பேருக்கு அதியுயர் சித்திகள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பரீட்சைத் திணைக்களம் வெளியிட்டுள்ள 2023 ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியில் இருந்து பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுள் 21 மாணவர்கள் சகல பாடங்களிலும் 7 இரு மொழிப்பிரிவு மாணவர்கள் உள்ளடங்கலாக அதி திறமைச் சித்திகளை (9 ஏ) பெற்றுள்ளனர்.

8 பாடங்களில் ஒரு இரு மொழிப் பிரிவு மாணவன் உள்ளடங்கலாக 16 மாணவர்களும், 7 பாடங்களில் ஒரு இரு மொழிப் பிரிவு மாணவன் உள்ளடங்கலாக 10 மாணவர்களும், 6 பாடங்களில் இரு இரு மொழிப் பிரிவு மாணவர்கள் உள்ளடங்கலாக 16 மாணவர்களும் அதி திறமைச் சித்திகளைப் (9ஏ) பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் உள்ளிட்ட கல்வி சமூகம் சித்தியடைந்த மாணவர்களுக்கும் கற்பித்த ஆசிரியர்களுக்கும் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

# கல்முனை மஹ்மூத் மகளிரில் 26 மாணவிகள் அதியுயர் சித்தி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சையில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியிலிருந்து 26 மாணவிகள் சகல பாடங்களிலும் அதி திறமைச் சித்திகளை (9ஏ) பெற்றுள்ளனர்.

சித்தியடைந்துள்ள மாணவர்களை பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் பாராட்டியுள்ளனர்.







# வளத்தாப்பிட்டி கிளினிக் நிலையம் புனரமைக்கப்பட்டு திறந்து வைப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துக்கு உட்பட்ட வளத்தாப்பிட்டி கிளினிக் நிலையம் மீள் புனரமைப்பு செய்யப்பட்டு அண்மையில் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சகீலா இஸ்ஸதீன், இராணுவ கட்டளைத் தளபதி இராணுவ கொமாண்டர், டாக்டர் மாஹிர், டாக்டர் றிஸ்வின் உட்பட அலுவலக உத்தியோகத்தர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அண்மையில் வளத்தாப்பிட்டியில் நடைபெற்ற நடமாடும் வைத்திய முகாம் ஒன்றுக்கு சென்றபோது, சந்திரசேகரன் என்பவரின் உதவியுடன் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ஐ.எம்.கபீர், டாக்டர் திருமதி ஜீவா ஆகியோர் வன்னி எயுட்ஸ் எனப்படும் கனேடிய தொண்டு நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க லவ் ட்றஸ்ட் நிறுவனத்தின் இணைப்புடன் 1.6 மில்லியன் ரூபா நிதிப் பங்களிப்புடன் இந்தப் புனரமைப்புப் பணிகள் இடம் பெற்றுள்ளன.

இதன் கட்டுமானப் பணிகளை இலங்கை இராணுவம் மேற் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# இன்று பிற்பகல் அல்லது இரவு இடியுடன் கூடிய மழை பெய்யும்



நாட்டின் பல பகுதிகளில் இன்று பிற்பகல் அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மத்திய, சப்ரகமுவ, தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் களுத்துறை மாவட்டத்திலும் சில இடங்களில் இன்று 100 மில்லிமீற்றர் அளவில் பலத்த மழை பெய்யக்கூடும்.

இடியுடன் கூடிய மழையின் போது, பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.







# வி.ரி. சகாதேவராஜாவிற்கு மல்லிகைத்தீவில் கௌரவிப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை வலயத்தில் கடந்த 36 வருடங்கள் கல்விச் சேவையில் இருந்து ஓய்வு பெறும் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா மல்லி கைத்தீவு அ.த.க.பாடசாலையில், பொன் னாடை போர்த்தி கௌரவிக் கப்பட்டார்.

அவரது சேவையை பாராட்டி அதிபர், ஆசிரியர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுப்பரிசு வழங்கி கௌரவித் தார்கள்.

அதிபர் எஸ்.ஜதீஸ்வரர தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில், அதிதிகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.பரமதயாளன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் எ.எல். நாசிர் அலி ஆகியோருடன் முட்டைக்கோஸ் நண்பர்கள் வட்ட இணைப்பாளர் சமூக செயற்பாட்டாளர் பி. அனுசன், இலங்கையை 42 நாட்களில் சுற்றி வந்த எஸ்.கே முனாபிர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அதிதிகள் அனைவரும் பொன் னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.











# ‘கிளீன்அப் ஸ்ரீலங்கா’ எனும் தொனிப்பொருளில் சிரமதானம்

**(த.சுபேசன்)**

‘கிளீன்அப் ஸ்ரீலங்கா’ எனும் தொனிப்பொருளில் நேற்று சனிக் கிழமை காலை யாழ். நகரம் மற்றும் பண்ணை பகுதிகளில் பிளாஸ்டிக் பொருள்களை அகற்றும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மேற்படி செயற்திட்டமானது நாடு முழுவதும் லயன்ஸ் கழக 306 டீ1 ஆளுநர் லயன் ரஜித ரொட்டிக்கோவின் தலைமைத்துவத்தில் லயன் கு.பிறேம் காந்தின் நெறிப்படுத்தலில் மேற் கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் யாழ். நகரம் மற்றும் பண்ணைப் பகுதிகளில் இடம்பெற்ற பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் கழிவு அகற்றும் பணியில் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் மற்றும் ஏனைய கழக உறுபினர்கள், பொலிஸார், மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# சாட்டி, முற்றவெளி மைதானத்தில் பிளாஸ்டிக் பொருள்கள் அகற்றல்





**(த.சுபேசன்)**

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் நேற்று சனிக் கிழமை யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானம் மற்றும் சாட்டி கடற்கரைச் சூழல் ஆகியவற்றில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத் தலைவர் ரோட்டரியன் கிருபாகரன் தலைமையில் இடம்பெற்ற சிரமதான நிகழ்வில் பெருமளவான பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு அப்புறப்படுத்தப் பட்டன.

இந்தத் தினத்தில் கிளீன் அப் ஸ்ரீலங்காவுடன் இணைந்து ரோட்டரிக் கழகம் உள்ளிட்ட ஏனைய அமைப்புக்கள் நாடளாவிய ரீதியாக சிரமதானப் பணிகளை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.






# காசாவை தொடர்ந்து பெய்ரூட்! லெபனானில் இஸ்ரேல் ஆக்கிரமிப்பு !!

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

(தொடர்ந்து யுத்தகளமாக இருக்கும் ஹிஸ்புல்லா – இஸ்ரேல் மோதலின் வரலாற்றுப் பார்வையாக இந்த ஆக்கம் அலசுகிறது.)

லெபனானில் ஹிஸ்புல்லா இலக்குகள் மீது இஸ்ரேல் தாக்குதலில் 500 பேர் பலியானதுடன், பல ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் காயம் அடைந்துள்ளனர். இதுவரை கால தாக்குதலில் பெருந்தொகையானோர் கொல்லப்பட்டமை இதுவே யாகும்.

உயிரிழந்தவர்களில் பல சிறுவர்கள் உள்ளனர் என லெபனான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தென்லெபனான் மீது இஸ்ரேல் தொடர்ந்து விமான தாக்குதலை மேற்கொள்கின்றது. பொது மக்கள் அங்கிருந்து தப்பியோடுகின்றனர் என தகவல்கள் தெரிவித்துள்ளது.

இதேவேளை தென் லெபனானிலும் பெக்கா பிராந்தியத்திலும் உள்ள ஹெஸ்புல்லா அமைப்பின் 800 இலக்குகளை தாக்கியுள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

### திணறடித்த பேஜர் தாக்குதல்

ஹிஸ்புல்லா செயற்பாட்டாளர்கள் மீதான பேஜர் தாக்குதல் பல தசாப்தங்களாக நீடித்த போரில் சமீபத்திய பெருஞ் சவாலாக ஹிஸ்புல்லா இயக்கத்துக்கு ஏற்பட்டது.

லெபனான் முழுவதும் ஹிஸ்புல்லா உறுப்பினர்களின் பேஜிங் சாதனங்கள் ஒரே நேரத்தில் வெடித்ததை அடுத்து, லெபனானில் சுமார் 2,800 பேர் அவர்களது பேஜர் சாதனங்கள் வெடித்ததில் காயமடைந்தனர். குறைந்தது நாற்பது பேர் கொல்லப்பட்டனர்.

காயமடைந்தவர்களில் பெரும்பாலானவர்கள் லெபனான் ஹிஸ்புல்லாவைச் சேர்ந்தவர்கள்.

ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேல் மீதே தாக்குதலைக் குற்றம் சாட்டியது.

குறைந்தது 45000 பேரைக் கொன்ற காசா மீதான போரில் இருந்து ஒக்டோபர் 8 முதல், இஸ்ரேலை திசை திருப்பும் வண்ணம், அதன் தாக்குதல்களைத் தொடங்கிய ஹிஸ்புல்லா கிட்டத்தட்ட ஒரு வருடமாக இஸ்ரேலுடனான தெற்கு லெபனான் எல்லையில் தாக்குதல்களை செய்து வருகிறது.

### 1982 லெபனான் படையெடுப்பு

தெற்கு லெபனானில் இருந்து பாலஸ்தீன விடுதலை அமைப்பு அதன் மீது நடத்திய தாக்குதல்களுக்கு பதிலடியாக, ஜூன் 1982 இல் இஸ்ரேல் லெபனானை ஆக்கிரமித்தது. அதன் பின்னர் லெபனானில் உள்நாட்டுப் போர் ஏழு ஆண்டுகளாக நடந்தது.

லெபனானில் ஒரு நட்பு அரசாங்கத்தை நிறுவும் நம்பிக்கையில், இஸ்ரேல் தெற்கே ஆக்கிரமித்து மேற்கு பெய்ரூட்வரை சென்றது. அங்கு பி.எல்.ஓ. தளமாக இருந்து செயற்பட்டமையால், அது முற்றுகைக்கு உட்பட்டது.

நீண்ட கால உடன்பாட்டிற்குப் பிறகு,பி.எல்.ஓ. துனிசியாவுக்கு தலைமையகத்தை எடுத்து சென்றது. ஆனால் இஸ்ரேலின் இராணுவம் லெபனானில் தங்கியிருந்து, உள்நாட்டுப் போரில் உள்ளூர் பினாமிகளை தொடர்ந்து ஆதரித்தது.

அத்துடன் சப்ரா மற்றும் ஷட்டிலா அகதிகள் படுகொலைக்கு இஸ்ரேல் பங்களித்தது. வலதுசாரி லெபனான் துணைப்படை ஆயுததாரிகள், இஸ்ரேலிய இராணுவத்துடன் ஒருங்கிணைந்து, இரண்டு நாட்களில் 2,000 முதல் 3,500 பாலஸ்தீனிய அகதிகள் மற்றும் லெபனான் குடிமக்களைக் கொன்றனர்.

இதன் பின் இஸ்ரேலின் படையெடுப்பை முறியடிக்க பல லெபனான் குழுக்கள் உருவாக்கப்பட்டன. ஒன்று ஷியா முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்த பாரம்பரியமாக மக்கள் குழுவாகும்.

மற்றயது ஹிஸ்புல்லா அமைப்பு அடிப்படைவாத முஸ்லீம் தலைவர்களின் சிந்தனையில் உருவானது. ஆரம்பத்தில் இருந்தே ஈரானால் ஆதரிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. மேலும் இஸ்ரேலை விரட்டுவதற்கான ஆணையைப் பெற்றது.

இஸ்ரேல் ஆக்கிரமிப்பில் அதிருப்தியடைந்த இளைஞர்கள் பெக்கா பள்ளத்தாக்கு மற்றும் பெய்ரூட்டின் தெற்கு புறநகர் பகுதிகளில் வசிப்பவர்களின் ஆதரவைப் பெற்றனர். குறிப்பிடத்தக்க ஷியா மக்கள்தொகை கொண்ட ஓரங்கட்டப்பட்ட பகுதிகள் ஹிஸ்புல்லா விரைவில் லெபனானில் ஒரு குறிப்பிடத்தக்க சக்தியாக மாற வழிவகுத்தது.

### 1983 தாக்குதல்கள்

இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு எதிராக 1982 மற்றும் 1986 க்கு இடையில், வெளிநாட்டு இராணுவ பிரசன்னத்துக்கு எதிரான பல தாக்குதல்கள் பல்வேறு குழுக்களால் நிறைவேற்றப்பட்டு உரிமை கோரப்பட்டன. ஆனால் பல ஹிஸ்புல்லா மீது குற்றம் சாட்டப்பட்டன.

ஒக்டோபர் 23, 1983 அன்று, தலைநகர் பெய்ரூட்டில் பல படைமுகாம் கட்டிடங்கள் மீது குண்டுவீசி 300 இற்கும் மேற்பட்ட பிரெஞ்சு மற்றும் அமெரிக்க படையினர் கொல்லப்பட்டனர்.

இந்தக் குண்டுவெடிப்பு இஸ்லாமிய ஜிஹாத்

தொடர்ச்சி ▼



# காசாவை தொடர்ந்து பெய்ரூட்! லெபனானில் இஸ்ரேல் ஆக்கிரமிப்பு !!

**தொடர்ச்சி ▲**

குழுவால் மேற்கொள்ளப்பட்டது. இது ஹிஸ்புல்லாவின் முன்னணி என்று பலரால் நம்பப்படுகிறது.

**1985இல் ஹிஸ்புல்லாவின் வளர்ச்சி**

1985இல், ஹிஸ்புல்லா போரிடும் தீவிரமான சக்தியாக வளர்ந்தது. அது பல நேச குழுக்களுடன் சேர்ந்து, தெற்கு லெபனானில் உள்ள லிட்டானி நதிக்கு இஸ்ரேலிய இராணுவத்தை திரும்பப் பெறும்படி கட்டாயப் படுத்த முடிந்தது.

இதன்பின்னர், லெபனான்-இஸ்ரேல் எல்லையில் “பாதுகாப்பு மண்டலம்” என்று அழைக்கப்பட்டதை இஸ்ரேல் அறிவித்தது.

பாதுகாப்பு வலயம் என்பது கிறிஸ்தவர்கள் ஆதிக்கம் செலுத்தும் தெற்கு லெபனான் இராணுவம் வலுவான பகுதியாகும்.

இந்தப் பகுதி பொதுவாக இஸ்ரேலிய ப்ராக்ஸி படையாக அறிவிக்கப்பட்டது. இது 2000 இல் இஸ்ரேல் வெளியேறும் வரை தெற்கு லெபனானின் ஆக்கிரமிப்பை தொடர்ந்து ஆதரித்தது.

**1992 அரசியல் வளர்ச்சி**

1992 இல், லெபனானின் உள்நாட்டுப் போர் (1975-1992) முடிவடைந்த பின்னர், லெபனானின் 128 இடங்கள் கொண்ட சட்டமன்றத்தில் எட்டு இடங்களை வென்ற ஹெஸ்பொல்லா நாடாளுமன்ற அரசியலில் நுழைந்தது.

இதன்பின்னர் ஹிஸ்புல்லாவின் ஆசனங்கள் அதிகரித்தன. தற்போது அதன் கூட்டாளிகளும் இணைந்து இப்போது நாடாளுமன்றத்தில் 62 ஆசனங்களைக் கொண்டுள்ளனர்.

அதன் இருப்பு வலுவாக உள்ள பகுதிகளில், அதன் செல்வாக்கை அதிகரித்து, விரிவான சமூக நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகின்றனர்.

**1993 - ஏழு நாள் போர்**

ஜூலை 1993 இல், லெபனானில் ஏழு நாள் போர் என்றுஅழைக்கப்படும் “ஆபரேஷன் அக்கவுன்டபிலிட்டி” என்று அழைக்கப்பட்டு லெபனானை இஸ்ரேல் தாக்கியது.

இந்த மோதலில் 118 லெபனான் குடிமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 500 பேர் காயமடைந்தனர. மேலும் ஆயிரக்கணக்கான கட்டடங்கள் அழிக்கப்பட்டன.

**1996 ஏப்ரல் ஆக்கிரமிப்பு**

ஏப்ரல் 11, 1996 அன்று, லிட்டானி ஆற்றுக்கு அப்பால் ஹிஸ்புல்லாவை கட்டாயப்படுத்தி துரத்தவும், இஸ்ரேலிய இலக்குகளின் மீதான தாக்குதலைத் தடுக்கவும் இஸ்ரேல் மற்றொரு 17 நாள் தாக்குதலைத் தொடங்கியது.

லெபனானியர்கள் ஏப்ரல் ஆக்கிரமிப்பை, இஸ்ரேலால் “ஆபரேஷன் கிரேப்ஸ் ஆஃப் ரேத்” என்று அழைக்கப்படுகிறது. இது 1939 ஆம் ஆண்டு அமெரிக்க எழுத்தாளர் ஜான் ஸ்டெய்ன்பெக்கின் நாவலைக் குறிக்கிறது.

போரின் விளைவால் இரு தரப்பிலும் குறிப்பிடத்தக்க இராணுவ மற்றும் பொது மக்கள் உயிரிழப்புகள் ஏற்பட்டன மற்றும் லெபனானின் உள்கட்டமைப்பு மோசமாக சேதமடைந்தது.

1996 ஏப்ரல் 18 அன்று, ஆக்கிரமிக்கப்பட்ட தெற்கு லெபனானில் உள்ள கானா கிராமத்துக்குஅருகில் உள்ள ஐக்கிய நாடுகளின் வளாகத்தின் மீது இஸ்ரேல் ஷெல் தாக்குதல் நடத்தியது. சுமார் 800 இடம்பெயர்ந்த பொதுமக்கள் அங்கு தஞ்சமடைந்திருந்தனர்.

இந்த தாக்குதலில் குறைந்தது 37 குழந்தைகள் உட்பட 106 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 116 பேர் காயமடைந்தனர்.

**2006இல் ஜூலை போர்**

2006 ஆம் ஆண்டு இஸ்ரேலிய எல்லைக்குள் ஒரு நடந்த தாக்குதலால் ஹிஸ்புல்லா மூன்று இஸ்ரேலிய வீரர்களைக் கொன்றனர். வாசிம் நசல், இயல் பெனின் மற்றும் ஷானி துர்கேமன், மேலும் இருவரான எஹூட் “உடி” கோல்ட்வாசர் மற்றும் எல்டாட் ரெகேவ் ஆகியோரை உயிருடன் கைப்பற்றினர்.

இஸ்ரேலிய வீரர்களுக்கு ஈடாக லெபனான் கைதிகளை விடுவிக்குமாறு ஹிஸ்புல்லா கோரியது. இறுதியில், ஐந்து லெபனான் கைதிகளுக்கு ஈடாக இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு கோல்ட்வாஸர் மற்றும் ரெகேவ் இருவரின் உடல்கள் மட்டுமே திருப்பி அனுப்பப்பட்டன.

இப்போரில் ஏறக்குறைய 1,200 லெபனான் மக்கள் இறந்தனர்,4,400 பேர் காயமடைந்தனர், பெரும்பாலும் பொதுமக்கள் ஆவார்கள். இஸ்ரேல் 158 போர் வீரர்களின் இறப்புகளைப் பதிவுசெய்தது.

தொடரும் மோதல்களால் தற்போது வடக்கு இஸ்ரேலின் எல்லைப் பகுதியில் இருந்து சுமார் 60,000 இஸ்ரேலியர்கள் வெளியேற்றப்பட்டனர். இரு தரப்பு மக்களும் இன்னும் மீள திரும்பவில்லை. செப்டம்பர் 17, 2024 அன்று, லெபனானில் ஹிஸ்புல்லா இயக்கத்தைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான கையடக்க பேஜர்கள் வெடித்தன. அதன் பின்னர் போர் மிகத் தீவிரம் அடைந்துள்ளது.




# ஒருநாள் பாவிக்கும் பிளாஸ்ரிக்கை முதல் கட்டமாகத் தவிர்ப்போம்!

(பிளாஸ்ரிக் கழிவுகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்தும் பாரிய பணியில் பங்கெடுத்துள்ள யாழ்ப்பாணத்தை தளமாக கொண்டு செயற்படும் Save a Life எனும் அரச சார்பற்ற நிறுவனத்தின் நிறுவுனர் கந்தசாமி ராகு லனுடனான நேர்காணல்.)

இன்றய உலகில் இலகுவான தயாரிப்பு முறை, அதிகளவாக கிடைப்பனவு மற்றும் விலை குறைவு ஆகியவற்றை கருத்தில் கொண்டு அதிகளவான பிளாஸ்ரிக் பொருள்கள் அன்றாடம் மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

2015 ஆம் ஆண்டளவில் உலகில் 6300 மில்லியன் மெற்றிக் தொன் பிளாஸ்ரிக் கழிவுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன அதில் 9 சதவீதமானவை மட்டுமே மீள்சுழட்சி செய்யப்பட்டுள்ளன. 2050 ஆம் ஆண்டளவில் 12, 000 மில்லியன் மெற்றிக் தொன் கழிவுகள் நிலத்திலும் அதனை சூழவுள்ள பகுதி களிலும் தேங்கும் அபாயம் ஏற்படலாம் என ஆய்வா ளர்கள் எதிர்வு கூறுகின்றனர்.

இலங்கையில் தினமும் 10,768 மெற்றிக் தொன் கழிவுகள் உற்பத்தி செய்யப்படுகின்ற போதும் அதில் மூன்றில் ஒரு பகுதி மட்டுமே சேகரிக்கப்படுகின்றன. இன்றய காலப் பகுதியில் வளந்துவரும் நாடுகளில் பிளாஸ்ரிக் கழிவுகளை அகற்றுவது பாரிய சவாலான விடயமாக மாறியுள்ளது.

**கேள்வி :-** எப்போதிருந்து பிளாஸ்ரிக் பொருள்களை மீள்சுழற்சி செய்ய வேண்டும் என்ற எண்ணம் தங்களுக்கு ஏற்பட்டது ?

**பதில் :-** ஆரம்ப காலங்களில் எமது அரச சார்பற்ற நிறுவனம் ஊடாக பாடசாலைகள் தோறும் சென்று பாடசாலை மாணவர்களுக்கு "பிளாஸ்ரிக் அற்ற பாட சாலை" (Zero Plastic School) எனும் தொனிப் பொருளில் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்ரிக் பொருள்களை குறைப்பது மற்றும் பாடசாலைகளில் இடம்பெறும் நிகழ்வுகளில் பிளாஸ்ரிக் பாவனையை குறைத்தல் தொடர்பிலான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை மேற்கொண்டிருந்தோம்.

அந்தக் காலப்பகுதியில் பிளாஸ்ரிக் பாவனையால் ஏற்படும் பாதிப்பைக் குறைக்க நாமும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அதன் விளை வாகவே இப்போது பிளாஸ்ரிக் மீள்சுழட்சியை மேற் கொள்வதற்கு உந்து சக்தியாக அமைந்தது.

**கேள்வி :-** எவ்வகையான பிளாஸ்ரிக் பொருள்கள் தங்களால் சேகரிக்கப்படுகின்றன ?

**பதில்:-** நாங்கள் தற்போது பிளாஸ்ரிக் போத்தல்களை மட்டுமே பெற்றுக்கொள்கின்றோம். அவற்றைச் சேரித்துத் தரம்பிரித்து கொழும்பில் இயங்கும் விருதி (Viridis) நிறுவனத்திற்கு மீள்சுழற்சிக்காக வழங்குகின்றோம். அந்த நிறுவனம் எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும்

தொடர்ச்சி ▼



# ஒருநாள் பாவிக்கும் பிளாஸ்ரிக்கை முதல் கட்டமாகத் தவிர்ப்போம்!

தொடர்ச்சி▲

பிளாஸ்ரிக் பொருள்களை மீள்சுழற்சி செய்கின்றது. இதுவரை காலமும் 8 மெற்றிக் தொன் பிளாஸ்ரிக் போத்தல்கள் மீள்சுழற்சிக்காக அனுப்பப்பட்டுள்ளன.

**கேள்வி :-** தங்களால எவ்வாறான செயற்றிட்டங்களின் மூலம் பிளாஸ்ரிக் பொருள்கள் சேகரிக்கப் படுகின்றன?

**பதில் :-** பிரதானமாக 4 வழிகள் மூலம் பிளாஸ்ரிக் பொருள்களைச் சேகரிக்கும் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

1. கடற்கரைகளை தூய்மைப்படுத்தும் நிகழ்வுகளை ஒழுங்கமைத்து அவற்றில் சேகரிக்கும் கழிவுகளிலிருந்து பிளாஸ்ரிக் போத்தல்களை தரம் பிரித்துப் பெற்றுக் கொள்கின்றோம்.

சமூக மட்ட பிரதிநிதிகள், இளைஞர்கள், தன்னார்வலர்களது ஒன்றிணைந்த முயற்சியால் பிளாஸ்ரிக் பொருள்கள் வார இறுதி நாள்களில் சேகரிக்கப்படுகின்றன.

2. பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்கலைகழக மாணவர்களிடமிருந்தும் பிளாஸ்ரிக் போத்தல்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. அவர்கள் வழங்கும் பிளாஸ்ரிக் போத்தல் ஒன்றுக்கு ஊக்கத் தொகையாக 1 ரூபா வழங்கப்படுகின்றது. அதாவது ஒருவர் 1000 போத்தல்களை சேகரித்து வழங்கினால் அவருக்கு 1000 ரூபா வழங்கப்படும். மாணவர்களிடத்தில் பிளாஸ்ரிக் பொருள்களை மீள்சுழற்சி செய்வதை ஊக்குவிக்கும் வகையில் எம்மால் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

3. பெண் தொழில் முயற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களிடமிருந்து பிளாஸ்ரிக் போத்தல்கள் சேகரிக்கப்படுகின்றன. இது வரையில் 12 பெண் முயற்சியாளர்கள் எமக்கு பிளாஸ்ரிக் போத்தல்களை சேகரித்து வழங்கி வருகின்றனர். அவர்களுக்கு 1 கிலோ போத்தலுக்கு 30 ரூபா கொடுப்பனவாக வழங்குகிறோம்.

4. உணவகங்கள், திருமண மண்டபங்கள், விருந்தினர் விடுதிகளில் இருந்தும் பிளாஸ்ரிக் போத்தல்கள் சேகரிக்கப்படுகின்றன. அவர்களிடம் பெற்றுக்கொள்ளும் பிளாஸ்ரிக் போத்தல்களுக்கும் ஒரு கிலோவுக்கு 30 ரூபா கொடுப்பனவான வழங்கப்படுகின்றது.

**கேள்வி :-** இவ்வாறு சேகரித்து வழங்குவதன் மூலம் தங்களால் இலாபத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவுள்ளதா ?

**பதில் :-** எம்மால் சேகரிக்கும் பொருள்களை விற்பனை செய்வதன் மூலம் குறித்தளவு பணத்தை பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. ஆனாலும் எம்மால் உருவாக்கி நடைமுறைப்படுத்தப்படும் செயற்றிட்டங்களுக்கு அவ் நிதி செலவுசெய்யப்படுகின்றமையால் பெரியளவிலான இலாபம் எமக்கு கிடைப்பதில்லை. அத்துடன் இலாபத்தை மட்டும் பெற்றுக் கொள்வதற்கு அப்பால் பிளாஸ்ரி பொருள்களை மீள் சுழற்சி செய்வதையே இலக்காக கொண்டு எமது நிறுவனம் செயற்பட்டு வருகின்றது.

**கேள்வி :-** இனிவரும் காலங்களில் இந்தப் பணிகளைச் சிறப்புற மேற்கொள்ள எவ்வாறான திட்டங்களைக் கொண்டுள்ளீர்கள்?

**பதில் :-** இதுவரை காலமும் பிளாஸ்ரிக் போத்தல்களை மட்டுமே சேகரித்து வருகின்றோம். இனிவரும் காலங்களில் ஒரு நாள் பாவனை பிளாஸ்ரிக் பொருள்களையும் சேகரிப்பதற்கான திட்டங்களை வகுத்து வருகின்றோம். அது மட்டுமின்றி இதுவரையான காலப்பகுதியில் போத்தல்களை மட்டுமே சேகரித்து வழங்கி வருகின்றோம். இனிவரும் வருடங்களில் சேகரிக்கும் பிளாஸ்ரிக் பொருள்களைத் தூளாக்கி வழங்குதல் மற்றும் ஒரு மீள்சுழட்சி மையம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவுதல் ஆகிய பணிகளை முன்னெடுப்பதற்கான ஆரம்ப முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றோம்.

**கேள்வி :-** தங்களது இந்த முயற்சிக்கு அரச நிறுவனங்கள் ஆதரவு வழங்குகின்றனவா ?

**பதில் :-** தற்போது மாநகர சபை, நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளுக்கு திண்மக்கழிவு முகாமைத்துவம் பாரிய சவாலான விடயமாக மாறியுள்ளது இந்தக் காலப்பகுதியில் எம்மால் பிளாஸ்ரிக் பொருள்களை மீள்சுழற்சி செய்வதற்கான தீர்வு ஒன்று வழங்கப்படுவதால் அரச நிறுவனங்கள் தங்களது ஆதரவை வழங்குவதுடன் எம்முடன் இணைந்து பணியாற்றவும் விருப்பம் தெரிவித்துள்ளன.

**கேள்வி :-** பிளாஸ்ரிக் பொருள்களால் ஏற்படும் மாசுபாடுகளை குறைக்க பொது மக்களிடம் இருந்து எவ்வாறான பங்களிப்பை எதிர்பார்க்கின்றீர்கள் ?

**பதில் :-** பிளாஸ்ரிக் பொருள்களால் ஏற்படும் சூழல் மாசடைவுகள் காலத்துக்கு காலம் அதிகரித்து வருகின்றது. எனவே அவற்றைக் குறைப்பதற்கு பொது மக்கள் விழிப்புணர்வுடன் செயற்படுவது அவசியமாகும். தங்களால் பாவிக்கப்படும் பிளாஸ்ரிக் பொருள்களை குப்பைகளில் வீசியெறியாமல் மீள்சுழற்சிக்கு உட்படுத்த பழகிக்கொள்ள வேண்டும். அதுமட்டுமன்றி ஒருநாள் பாவனை பிளாஸ்ரிக் பொருள்களைப் பாவிப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். எமது எதிர்கால சந்ததியினரின் மகிழ்வான எதிர்காலத்துக்குச் சுற்றுச்சூழல் மாசடைவை குறைக்க வேண்டிய தேவையுள்ளதால் அனைவரும் ஒன்றினைந்து செயற்பட வேண்டும்.

**இ. மதுஷன்,**
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலை கழகம்.

# ஒலுவில் அல் ஹம்றா மாணவனுக்கு தேசிய கணித வினாடி வினாவில் தங்கம்

**(இஸற்.ஏ.றஹ்மான்)**

தேசியமட்ட கணித வினாடி வினாப்போட்டியில் கிழக்கு மாகாணம் சார்பாக பங்குபற்றிய ஒலுவில் அல் ஹம்றா தேசிய பாடசாலையின் தரம் 13 மாணவன் முஹம்மது இர்சாத் முஹம்மது பத்தஹ்ன் முதலிடம் பெற்று தங்கப் பதக்கத்தைத் தனதாக்கிக் கொண்டார்.

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகம் சார்பில் பங்குபற்றி வெற்றிபெற்ற ஒரே மாணவன் இவர் என்பது குறிப்பிடத்தக்கது

இந்த மாணவனுக்கும், அதிபர் அஷ்ஷேக் யூ.கே. அப்துர்ரஹீம் மற்றும் பிரதி, உதவி அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஒலுவில் மக்கள் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றனர்.







# மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பு கண்ணகி வித்தியாலய மாணவர்களுக்கு வாழ்க்கைத்திறன் பயிற்சி பாசறை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பு கண்ணகிமகாவித்தியாலய மாணவர்களுக்கு மட்டக்களப்பு விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியில் வாழ்கைத்திறன் பயிற்சி பட்டறையொன்று அண்மையில் நடைபெற்றது.

இந்தப் பயிற்சி பட்டறை நேர்மறை எண்ணங்கள் மற்றும் ஊக்கப்படுத்தல் ஆகிய தலைப்பின் கீழ் வழங்கப்பட்டது.

மேலும் விவேகானந்தா கல்லூரியின் பணிப்பாளர் க.பிரதீஸ்வரனின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், அதிபர், விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் முகாமையாளர் மற்றும் கல்லூரி சேவையாளர்கள் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

செயற்பாடு மற்றும் விளையாட்டுக்கள் மூலம் வாழ்க்கைத்திறன் பயிற்சி வழங்கப்பட்டமை முக்கிய அம்சமாகும்.









# கல்முனை கார்மேல் பற்றிமாவின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழா

கிழக்கில் புகழ்பெற்ற கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழாத் தொடர் எதிர்வரும் 13 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இன்று நடைபெற்ற ஊடக மாநாட்டின்போது அதிபர் அருட்சகோதரர் எஸ்.இ.றெஜினோல்ட் இந்த தகவலை தெரிவித்தார்.

இதன்போது, பாடசாலையின் 125 ஆவது ஆண்டு நிகழ்வுகள் தொடர்பாக விழாக்குழுத் தலைவர் அதிபர் றெஜினோல்ட் , செயலாளர் எஸ்.சிறிரங்கன் ஆகியோர் விளக்கம் அளித்தனர்.

இந்த நிகழ்வுகள் பாடசாலை கல்வி செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.





# துணை முதல்வராக உதயநிதி ஸ்டாலின் நியமனம்
# அமைச்சரவையில் 3 பேர் நீக்கம்; 4 பேர் சேர்ப்பு

தமிழக அமைச்சரவையில் நேற்று மாற்றம் செய்யப்பட்டது. அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அமைச்சர்கள் மனோ தங்கராஜ், கே.ராமச்சந்திரன், செஞ்சி மஸ்தான் ஆகியோர் அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். புதிய அமைச்சர்கள் ஆளுநர் மாளிகையில் இன்று மாலை பதவியேற்கின்றனர்.

தமிழகத்தில் கடந்த சில மாதங்களாகவே அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வராகப் போகிறார் என்று பேசப்பட்டு வந்தது. இந்நிலையில், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வராவதற்கான அறிவிப்பை ஆளுநர் மாளிகை நேற்று வெளியிட்டது.

அமலாக்கத் துறை வழக்கில் கைது செய்யப்பட்டு கடந்த 26 ஆம் திகதி பிணையில் வெளியே வந்த செந்தில் பாலாஜி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால், அவருக்கான இலாகா பின்னர் ஒதுக்கப்படும் என்று தெரிகிறது.

இவரை போலவே, அமைச்சரவையில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள டாக்டர் கோவி.செழியன், சா.மு.நாசர், பனைமரத்துப்பட்டி ஆர்.ராஜேந்திரன் ஆகியோருக்கும் இலாகா ஒதுக்கப்படவில்லை. தமிழக அமைச்சரவை தற்போது 5 ஆவது முறையாக மாற்றி அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பரிந்துரையை ஏற்று, ஆளுநர் மாளிகை நேற்று இரவு வெளியிட்ட அறிவிப்பில், "இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு கூடுதலாக திட்டம் மற்றும் வளர்ச்சித்துறையை ஒதுக்குவதோடு, துணை முதல்வராகவும் பொறுப்பு வழங்குமாறு தமிழக முதல்வர் ஆளுநரிடம் பரிந்துரைத்துள்ளார். மேலும், வி.செந்தில்பாலாஜி, கோவி.செழியன், ஆர்.ராஜேந்திரன், சா.மு.நாசர் ஆகியோருக்கு அமைச்சர் பதவி வழங்கவும் முதல்வர் பரிந்துரைத்துள்ளார். இந்த பரிந்துரைகளுக்கு ஆளுநர் ஒப்புதல் வழங்கியுள்ளார். சென்னை, கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் அமைச்சர்களின் பதவியேற்பு விழா, இன்று பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெறுகிறது.

அதேநேரம், பால்வளத்துறை அமைச்சரான டி.மனோ தங்கராஜ், சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், சுற்றுலாத் துறை அமைச்சர் கே.ராமச்சந்திரன் ஆகியோரை அமைச்சர் பதவியில் இருந்து விடுவிக்குமாறு முதல்வர் அளித்த பரிந்துரைக்கும் ஆளுநர் ஒப்புதல் வழங்கியுள்ளார்.

இதுமட்டுமின்றி, அமைச்சர்களின் துறைகளை மாற்றம் செய்வது தொடர்பான முதல்வரின் பரிந்துரைக்கும் ஆளுநர் ஒப்புதல் அளித்திருக்கிறார். அதன்படி, உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி, வனத்துறை அமைச்சராக மாற்றப்படுகிறார். சுற்றுச்சூழல்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை அமைச்சராக மாற்றம் செய்யப்படுகிறார்.

ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ், மனித வள மேம்பாடு மற்றும் முன்னாள் படைவீரர்கள் நலத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். வனத்துறை அமைச்சர் எம்.மதிவேந்தனுக்கு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சராக பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பால்வளம், காதி, கிராமத் தொழில்கள் துறை அமைச்சராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வசமிருந்த மனிதவள மேம்பாட்டுத் துறைக்கு பதிலாக சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம், மாசு கட்டுப்பாட்டு வாரியம் ஆகிய துறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன." – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சரவையில் இருந்து விடுவிக்கப்பட்ட கே.ராமச்சந்திரனுக்கு அரசு கொறடா பொறுப்பு வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

# உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வராவதால் தமிழ்நாட்டில் எந்த முன்னேற்றமும் ஏற்படாது

**எல்.முருகன் விமர்சனம்**

உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வராவதால் தமிழ்நாட்டுக்கு எந்த முன்னேற்றமும் ஏற்பட போவதில்லை என்று மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் உள்ள தூர்தர்ஷன் அலுவலகத்தில் 'தூய்மையே சேவை' என்ற பிரச்சார இயக்கத்தை மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை இணையமைச்சர் எல்.முருகன் நேற்று தொடங்கி வைத்தார். அதன் பின்னர் இடம்பெற்ற நிகழ்ச்சியில் அவர் உரையாற்றுகையில்,

"மத்திய அரசின் மூலம், செப்டம்பர் 18 முதல் ஒக்டோபர் .2 ஆம் திகதி வரை சேவை வாரங்களாக கடந்த 10 ஆண்டுகளாக கடைபிடித்து வருகிறோம். பெண் குழந்தைகள் உள்ள பள்ளிகள் மற்றும் வீடுகளில் 100 சதவீதம் கழிப்பறை வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் நம் நாடு மிக வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது. 2047 இல் இந்தியா வளர்ச்சி அடைந்த நாடாக மாற உள்ளது.

குறிப்பாக, தமிழகத்தில் சென்னை – பெங்களூர், சென்னை – விசாகப்பட்டினம் இடையே தொழில் வழித்தடம் அமைக்கப்படுகிறது.

அத்துடன், சென்னை, காமராஜர், தூத்துக்குடி வ.உ.சி துறைமுகம் ஆகியவை சர்வதேச தரத்துக்கு உயர்த்தப்படுகிறது. சென்னையை அடுத்த திருமழிசையில் சரக்குக் கிடங்கு பூங்கா கொண்டு வரப்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் பிரதமரைச் சந்தித்து கோரிக்கைகளை முன்வைத்துள்ளார். இந்த சந்திப்பின் அடுத்தக் கட்டமாக பிரதமர் அலுவலகம் மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வராக நியமிக்கப்பட்டால் தமிழ்நாட்டுக்கு எந்த முன்னேற்றமும் ஏற்படப் போவதில்லை. தி.மு.க. வந்தபின்தான் மதுவும், போதைப் பொருள் நடமாட்டம் அதிகரித்துள்ளது. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கேள்விக்குறியாகி உள்ளது." – என்றார்.

# ஹிஸ்புல்லாவின் அடுத்த தலைவராகிறார் நஸ்ரல்லாவின் வாரிசு ஹஷேம் சஃபிதீன்



லெபனானின் பெய்ரூட்டில் இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலில் ஹிஸ்புல்லா இயக்கத்தின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அந்த இயக்கத்தின் அடுத்த தலைவராக ஹஷேம் சஃபிதீன் அறிவிக்கப்பட்டுள்ளார்.

சஃபிதீன் சுமார் 32 ஆண்டுகள் ஹிஸ்புல்லாக்களின் தலைவராக இருந்த நஸ்ரல்லாவின் உறவினராவார்.

இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் சஃபிதீனும் கொல்லப்பட்டதாக முதலில் தகவல் வெளியான நிலையில், அவர் உயிருடன் இருப்பதாக சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

உருவ ஒற்றுமையில் நஸ்ரல்லாவைப் போலவே இருக்கும் சஃபிதீன் ஹிஸ்புல்லா அமைப்பில் ஆரம்பம் முதலே இணைந்து செயல்பட்டு வந்துள்ளார்.

தெற்கு லெபனானின் டெய்ர் குன்னுன் அல் நஹ்றில் 1964 ஆம் ஆண்டு பிறந்த ஹஷேம் சஃபிதீன், ஈரானில் தனது படிப்பினை முடித்தார். அதன் பின்பு 1990 ஆம் ஆண்டு அவர் மீண்டும் லெபனானுக்கு அழைக்கப்பட்ட போது அவர் நஸ்ரல்லாவின் வாரிசாக நியமிக்கப்பட்டார்.

கடந்த 2017 ஆம் ஆண்டு அமெரிக்காவால் தீவிரவாதியாக அறிவிக்கப்பட்ட சஃபிதீன், ஹிஸ்புல்லாக்களின் அரசியல் விவகாரங்களை மேற்பார்வையிடுபவராக செயல்பட்டார். அக்குழுவின் ஜிகாத் குழுவின் உறுப்பினராகவும் உள்ளார்.

கொல்லப்பட்ட ஈரானிய இராணுவ ஜெனரல் காசிம் சுலைமானியின் மகள் ஜீனாப் சுலைமானியின் மாமனார் என்ற முறையில் ஈரான் அரசுக்கு நெருக்கமானவராக சஃபிதீன் இருக்கிறார்.

இதனிடையே, சிரியாவை ஆதரித்ததற்காக சவூதி அரேபியாவால் இவர் கறுப்பு பட்டியலில் இணைக்கப்பட்டார்.

ஹிஸ்புல்லாக்களின் நிர்வாக சபையின் தலைவராக இருந்த ஹஷேம் சஃபிதீன் அந்த அமைப்பின் அரசியல் விவகாரங்களைக் கவனித்து வந்தார். அதேபோல் ஹிஸ்புல்லாக்களின் ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளைக் கவனித்து வந்த ஜிகாத் குழுவிலும் உறுப்பினராக இருந்தார்.

கடந்த 30 ஆண்டுகளாக ஹிஸ்புல்லாக்களின் கல்வி மற்றும் நிதிச்செயல்பாடுகள் உள்ளிட்ட நடவடிக்கைகளை சஃபிதீன் மேற்பார்வையிட்டு வந்தார். இதனிடையே, ஹில்புல்லாக்களின் இராஜாங்க விஷயங்களை நஸ்ரல்லா கவனித்து வந்தார்.

இந்தநிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, ஹசன் நஸ்ரல்லாவை கொல்வதற்கான உத்தரவினை வழங்கியதாக தெரிவித்தார். மேலும் போரின் இலக்குகளை அடைவதற்கு நஸ்ரல்லாவின் மரணம் இன்றியமையாத ஒன்று என்றும் நஸ்ரல்லாவின் மரணம் வரலாற்றுத் திருப்புமுனை என்றும் தெரிவித்தார்.

# நேபாளத்தில் கனமழை வெள்ளம் 39 பேர் உயிரிழப்பு; பலர் மாயம்




நேபாளத்தில் தொடர்ந்து பெய்யும் கனமழை காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதில் சிக்கி 39 பேர் உயிரிழந்துள்ளனர், 11 பேரை காணவில்லை.

நேபாளத்தில் கடந்த வெள்ளிக் கிழமை முதல் கனமழை பெய்து வருகிறது. இதனால் பல இடங்களில் திடீர் வெள்ளப் பெருக்கு ஏற்படலாம் என பேரிடர் மேலாண்மை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

அதன்படி பல இடங்களில் வெள்ளம் சூழ்ந்தது. தலைநகர் காத்மாண்டுவில் 226 வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின. இங்கு 9 பேரும், லலித்பூரில் 16 பேரும், பக்தாபூரில் 5 பேரும் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தனர்.

ஏனைய இடங்களிலும் உயிரிழப்புகள் ஏற்பட்டன. இதுவரை நேபாளத்தில் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 39 ஆக உயர்ந்துள்ளது. பலரை காணவில்லை.

வெள்ளம் பாதித்த பகுதிகளில் நேபாள பாதுகாப்பு படைகளைச் சேர்ந்த 3,000 வீரர்கள் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுடன் உள்ளூர் மக்களும் இணைந்து மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பக்கங்கள் 04

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 29/09/2024

## ரொறன்ரோவில் கத்திக்குத்து

ஒன்றாரியோ, செப்ரம்பர் 29 சனிக்கிழமை பிற்பகல் ரொறன்ரோவின் மேற்கு முனையிலுள்ள உணவகம் ஒன்றில் கத்திக்குத்து காயங்களுடன் நடந்து சென்ற நபர் 02




# கனடாவில் புலம்பெயர்தல் விதிகள் செவ்வாய் முதல் நடைமுறையில்!

## புலம்பெயர் தொழிலாளர்கள் கடும் அவதிக்குள்ளாகும் நிலை

**கனடா பிரதமர், கனடாவுக்கு வரும் குறைந்த ஊதிய தற்காலிக பணியாளர்கள் மற்றும் நிரந்தரக் குடியிருப்பு அனுமதி பெறுவோரின் எண்ணிக்கையைக் குறைக்க திட்டமிட்டுள்ளார் என சமீபத்தில் தெரிவித்திருந்தார்.**

**அதைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் புதிய புலம்பெயர்தல் விதிகள் சில அமுலுக்கு வந்துள்ளன.**

**ஆனால், இந்தப் புதிய விதிகளால் பல நடைமுறைப் பிரச்சினைகள் உருவாகியுள்ளன.**

கனடாப் பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோ, கனடாவில் எங்கெங்கு வேலையில்லாத் திண்டாட்ட வீதம் 6 சதவிகிதத்துக்கு அதிகமாக உள்ளதோ, அங்கெல்லாம் வெளிநாட்டவர்களுக்கு பணி அனுமதிகள் வழங்கப்படாது என்று கூறியுள்ளார்.

பருவகால பழங்கள் பறிக்கும் பணி, கட்டுமானம் மற்றும் சுகாதாரத் துறைக்கு மட்டும் இந்த விதியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

ட்ரூடோ வெளியிட்ட அறிவிப்பில், கனேடிய பணி வழங்குவோர் வேலைக்கு எடுக்க அனுமதிக்கப்படும் குறைந்த ஊதிய தற்காலிக பணியாளர்கள் எண்ணிக்கை, 20 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதமாக குறைக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

இந்த விதிகள், நேற்று முன்தினம், அதாவது, செப்டம்பர் மாதம் 26ஆம் திகதி அமுலுக்கு வந்துள்ளன.

ஆனால், புதிய புலம்பெயர்தல் விதிகளால் பல நடைமுறைப் பிரச்சினைகள் உருவாகியுள்ளன.

பல உணவங்கள், புலம்பெயர் பணியாளர்கள் இல்லாவிட்டால், தாங்கள் உணவகங்களையே மூடவேண்டியதுதான் என்கிறார்கள்.

பல பணிகளில் தட்டுப்பாடு நிலவும் நிலையிலும், கனடா அரசு குறைந்த ஊதிய தற்காலிக பணியாளர்களின் எண்ணிக்கையைக் குறைத்தே தீருவது என ஒற்றைக்காலில் நிற்கிறது.

அந்தக் குறைந்த ஊதிய தற்காலிக பணியாளர்கள் பலருடைய பணி அனுமதி காலாவதியாக இருக்கும் நிலையில், அவர்கள் அனைவரையும் மீண்டும் பணிக்கு எடுக்கவும் முடியாது.

அத்துடன், ஒரு வருடத்துக்குதான் பணி அனுமதிகளும் வழங்கப்பட உள்ளன.

ஆக, பணி வழங்குவோர், புதிதாக பணியாளர்களை பணிக்கு எடுத்து, அவர்களுக்கு பயிற்சி கொடுக்கும் நிலையும் காணப்படுகிறது.

ஆக மொத்தத்தில், அரசின் குறைந்த ஊதிய தற்காலிக பணியாளர்கள் எண்ணிக்கையைக் குறைக்கும் திட்டத்தால் புலம்பெயர் தொழிலாளர்கள் கடும் அவதிக்குள்ளாக இருப்பதுடன், பல தொழில்கள் மூடப்படும் அபாயமும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.






# ஸ்காபரோவில் நேற்று மாலை கத்திக்குத்துக்கு ஒருவர் பலி!

ஒன்றாரியோ, செப்ரம்பர் 29 வடக்கு ஸ்காபரோவில் உள்ள குடியிருப்பு ஒன்றில் நேற்று மாலை கத்திக்குத்து தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மெக்னிக்கோல் ஒழுங்கை மற்றும் ஓல்ட் பின்ச் ஒழுங்கை கிழக்கிற்கு இடையே பிரிம்லி வீதியில், பர்ம்வூட் பொலிவர்ட்டில் உள்ள ஒரு வீட்டில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று மாலை 6:45 மணியளவில் அவர்கள் அந்தப் பகுதிக்கு அழைக்கப் பட்டனர் என ரொறன்ரோ பொலிஸார் தெரிவித்தனர்

சம்பவ இடத்தில் ஒருவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும், ஆனால் யாரையும் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படவில்லை என்றும் துணை மருத்துவர்கள் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் பின்னர் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்திற்கு வழிவகுத்த சூழ்நிலைகள் தற்போது தெரிய வில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.







## ரொறன்ரோவில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் லிட்டில் ஜமைக்கா பகுதியில், எக்ளிண்டன் மற்றும் ஒக்வுட் அவென்யூஸ் அருகே நடந்தது.

கத்திக்குத்து சம்பவம் தொடர்பாக பிற்பகல் 3:41 மணியளவில் அவர்கள் அந்தப் பகுதிக்கு அழைக்கப்பட்டதாக ரொறன்ரோ பொலிஸார் தெரிவித்தனர்.

அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் தகவல் தெரிந்தவர்கள் யாரேனும் ரொறன்ரோ பொலிஸாரையோ அல்லது குற்றத்தை தடுப்பவர்களையோ அநாமதேயமாகவேனும் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



# லெபனானில் பாதிப்புற்றோருக்கு கனடா 10 மில்லியன் டொலர் நிதி

ஒன்றாரியோ, செப்ரம்பர் 29

லெபனானில் இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் இடையே மோதல் அதிகரித்து வரும் நிலையில், அங்குள்ள பொதுமக்களுக்கு மனிதாபிமான உதவிக்காக கனடா 10 மில்லியன் டொலர்களை வழங்குகிறது.

சர்வதேச மேம்பாட்டு அமைச்சர் அகமது ஹசென் சனிக்கிழமை ஒரு செய்தி வெளியீட்டில் இந்த நிதி பற்றி அறிவித்தார்.

இது உணவு, தண்ணீர் மற்றும் பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம் உள்ளிட்ட அவசரகால சுகாதாரப் பாதுகாப்பு போன்றவற்றை வழங்க உதவும் என்று அந்தச் செய்தி வெளியீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லெபனானில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு, கனடா நன்கொடை அளிக்கும் ஐ.நா.வின் மத்திய அவசரகால பதில் நிதியத்தால் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட 10 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு கூடுதலாக இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.



# பிரிட்டிஷ்கொலம்பியாவில் வேட்பு மனுத் தாக்கல் முடிவு

பிரிட்டிஷ்கொலம்பியா, செப்ரம்பர் 29

புதிய ஜனநாயகவாதிகள் மற்றும் கன்சர்வேட்டிவ் கட்சிகள் எதிர்வரும் ஒக்டோபர் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலுக்கான முழு வேட்பாளர்களையும் பரிந்துரைத்துள்ளனர் என பிரிட்டிஷ் கொலம்பியா தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இரண்டு பிரதான கட்சிகளும் மாகாணத்தின் 93 தொகுதிகளில் ஒவ்வொன்றிற்கும் வேட்பாளர்களை நிறுத்தும் என்று பிரிட்டிஷ் கொலம்பியா தேர்தல்கள் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் பசுமைக் கட்சி 69 வேட்பாளர்களை பரிந்துரைத்தது.

மொத்தம் 323 வேட்பாளர்களுடன் சனிக்கிழமை பிற்பகல் வேட்புமனுத் தாக்கல் முடிவடைந்தது, அவர்களில் 269 பேர் ஏழு வெவ்வேறு அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர் மற்றும் 54 பேர் தேர்தலில் போட்டியிடும் சுயேச்சைகள் அல்லது இணைக்கப்படாத வேட்பாளர்களாவர்.



# குற்றச் செயல் கூட்டத்துக்கு எதிராக ஆட்சேப நடவடிக்கை

கியூபெக், செப்ரம்பர் 29

மொன்ரியலின் முஸ்லொம் மற்றும் மக்ரிபி சமூகங்களைச் சேர்ந்தவர்கள் சனிக்கிழமை பிற்பகல் ஒரு நகர பூங்காவில் ஒன்றுகூடி, குற்றச் செயல்களைச் செய்ய இளைஞர்களை ஆட்சேர்ப்பு செய்யும் தெருக் கும்பல்களின் ‘கொடுமை’ என்று அவர்கள் விவரித்தனர்.

நகரின் செயின்ட் லியோனார்ட் பரோவில் உள்ள வில்ஃப்ரிட்-பாஸ்டின் பூங்காவில் பல பங்கேற்பாளர்கள் இதில் கூடினர்,

இதில் குழந்தைகள் துக்கம் தெரிவிக்கும் வெற்று, கருப்பு அட்டைகளை ஏந்தியிருந்தனர்.

ஹெல்ஸ் ஏஞ்சல்ஸ்-இணைக்கப்பட்ட பதுங்கு குழிக்கு அருகில் அல்ஜீரிய வம்சாவளியைச் சேர்ந்த 14 வயது சிறுவனின் மரணம் உட்பட, மாகாணத்தில் பல சமீபத்திய சம்பவங்களைத் தொடர்ந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள், பெற்றோர்கள் மற்றும் பிற சமூக உறுப்பினர்கள் எச்சரிக்கையை ஒலிக்க மேடையேற்றினர்.

# லிபரல் கட்சியினரின் போக்குக் குறித்து தேசிய பழங்குடியின மக்கள் அதிருப்தி

ஒன்றாரியோ, செப்ரம்பர் 29

ஒட்டாவா - பழங்குடியின மக்களுடன் புதிய பாதைகள் மற்றும் நாட்டிற்கு இடையேயான உறவுகளை வளர்ப்பதாக உறுதியளித்து 2015 இல் தேர்ந்தெடுக்கப்பட்ட லிபரல் கட்சியானது இன்றைய லிபரல் கட்சிக்கு முற்றிலும் ஒத்ததாக இல்லை என்று மூன்று தேசிய பழங்குடியின அமைப்புகளின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

கனடாவில் 70,000 இன்யூட்களுக்கு தேசியக் குரலாகச் செயல்படும் Inuit Tapiriit Kanatami இன் தலைவரான Natan Obed, ‘2015 இல் தொடங்கிய எங்களின் நல்லிணக்கத் தருணம் உண்மையில், தொடக்கத்தில், மாற்றப்பட்ட கனடாவின் நீல-வான நம்பிக்கையைக் கொண்டிருந்தது.

‘இப்போது, பல சந்தர்ப்பங்களில், எங்கள் தெளிவான நிலைப்பாடுகளை எவ்வாறு செயல்படுத்துவது என்பதைக் கண்டுபிடிக்க முயற்சிக்கிறோம் - எங்கள் உரிமைகளை செயல்படுத்த அல்லது இந்த நாட்டுடன் சிறந்த உறவை உருவாக்க நாங்கள் செய்ய விரும்புகிறோம். ஆனால் நாங்கள் சவால்களைப் பார்க்கிறோம். அதைச் செய்ய மத்திய அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுவது அல்லது பழங்குடியின மக்களிடையே கூட வேலை செய்வது கடினமாக உள்ளது’ எனத் தெரிவித்துள்ளார்.

